# நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பு

## H&M வியாபாரக் கூட்டு நிறுவனம்

**H&M நிறுவனத்தில், வெற்றிகரமானதோர் வியாபார நிறுவனமாக இருப்பதன் இயல்பான பகுதியே நீண்டநாள் நிலைக்கும் தன்மை தான் என்று நாங்கள் எங்கள் மனதில் உறுதி கொண்டுள்ளோம். ஆகவே, நாங்கள் நன்னெறி ரீதியாகவும், வெளிப்படைத் தன்மையோடும், பொறுப்போடும் செயல்படவே எப்போதும் கடுமுயற்சி எடுக்கிறோம் அதோடு இதையே எங்களது வியாபாரக் கூட்டு நிறுவனங்களும் செய்ய வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். H&M என்பது, H&M குழுமத்திற்குள் உள்ள அனைத்துக் கூட்டு நிறுவனங்களையும், பிராண்டுகளையும் குறிக்கிறது.**

**சட்டத்திற்கு இணங்கி நடப்பது தான் அடிப்படை ஆரம்ப நிலையாகும், ஆனால் நாம் ஒன்றிணைந்து, பின்வரும் பிரச்சினைகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு சட்டம் என்ன சொல்கிறதோ அதனையும் தாண்டி வளர்ச்சியடைகிறோம் என்பதே எங்களது அபிலாசையாகும்;**

**ஆரோக்கியமான பணியிடங்கள்:** வருமானம் ஒன்றை வழங்குவது ஒருபுறமிருக்க, வேலை வாய்ப்பு என்பது, மனிதர்களையும், அவர்தம் குடும்பத்தினரையும், சமுதாயங்களையும் செழித்தோங்கச் செய்கிறது. பாதுகாப்பானதும், ஆரோக்கியமானதுமானதோர் பணியிடத்தை வழங்குவது, வேலையில் உரிமைகளை உத்திரவாதமளிப்பது, பணியாளர்களின் அடிப்படைத் தேவைகளைச் சந்திக்கிற நியாயமாக வாழ்க்கைச் சம்பளத்தைக் கொடுப்பது மற்றும் சாதாரண முறையிலான பேச்சுவார்த்தையை மேம்படுத்துவது ஆகியவை, வேலைகளையும், தொழில்நிறுவன வளர்ச்சியையும் உருவாக்குகிற, நீண்டநாள் நிலைக்கும் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவையாகும்.

**ஆரோக்கியமான சூழல் மண்டலங்கள்:** சூழல் மண்டலங்கள், சுத்தமான காற்று மற்றும் தண்ணீர் போன்ற இயற்கை வளங்களை நமக்கு வழங்குகின்றன, இவை மனிதர்களுக்கும், சமுதாயங்களுக்கும், வியாபார நிறுவனங்களுக்கும் அத்தியாவசியமானவையாகும். தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததிகளின் தேவைகளைச் சந்திப்பதற்கு, சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகிற தீங்கினைத் தடுப்பதன் மூலமாகவும், இயற்கை வளங்களைப் பொறுப்போடு உபயோகிப்பதன் மூலமாகவும், சூழல் மண்டலங்களின் நீண்ட-கால ஆரோக்கியத்தைப் பேணிக்காத்தாக வேண்டும்.

**விலங்கின நலவாழ்வு:** விலங்கினங்களும் மனிதத் தன்மையுடன் நடத்தப்படுவதற்கு உரிமையுள்ளவையாக இருக்கின்றன. இதற்கு, நல்ல கால்நடைப் பராமரிப்பு மற்றும் விலங்கு-அல்லாத பரிசோதனை முறைகள் ஆகியவற்றை ஏற்பதன் வாயிலாக மதிப்பளித்தாக வேண்டும்.

H&M குழுமமும், தனது வியாபாரக் கூட்டு நிறுவனங்கள், தங்களது வழங்கல் சங்கிலியில் இந்த அர்ப்பணிப்பில் கோடிட்டுக் காண்பித்துள்ள தேவைகள் மற்றும் அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது. H&M குழுமம் அனைத்து விதமான ஊழல்களுக்கும் பூஜ்ஜிய சகிப்புத்தன்மைக் கொள்கையைக் கொண்டுள்ளது அதோடு ஓர் வலிமையான ஊழல்-ஒழிப்புத் திட்டத்திற்கு தன்னை அற்பணித்துக் கொண்டுள்ளது. நன்னெறிகள் விதி/வியாபாரக் கூட்டு நிறுவன அர்ப்பணிப்பு என்பது, அனைத்து வியாபாரக் கூட்டாளிகளும் இதற்கு இணங்கி நடப்போம் எனக் கையொப்பமிட்டு, அர்ப்பணித்துக் கொள்கிறதோர் தனியான அர்ப்பணிப்பாகும்.
இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பில், பின்வரும் விஷயங்கள் அடங்குகின்றன:

| 1. ஆரோக்கியமான பணியிடங்கள் | 2.ஆரோக்கியனான சூழல் மண்டலங்கள் | 3.விலங்கின நலவாழ்வு |
|---|---|---|
| ‘ சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு<br>‘ பாகுபாடு காண்பித்தல், வேற்றுமை மற்றும் சமத்துவம்<br>‘ அங்கீகரித்த வேலைவாய்ப்பு<br>‘ நியாயமான வாழ்க்கைச் சம்பளம், பலன்கள் மற்றும் பணி நேரங்கள்<br>‘ சங்கம் அமைப்பதற்கும் கூட்டாக பேரம் பேசுவதற்குமான சுதந்திரம்<br>‘ குழந்தைத் தொழிலாளர் மற்றும் இளம் வயதுப் பணியாளர்கள்<br>‘ கட்டாய தொழிலாளர் | ‘ பருவநிலை மற்றும் காற்றுத் தரத்தில் ஏற்படுகிற தாக்கம்<br>‘ நீர் வளங்களில் ஏற்படுகிற தாக்கம்<br>‘ வேதிப்பொருட்களின் உபயோகம்<br>‘ கழிவு, மறு-உபயோகம் மற்றும் மறுசுழற்சி<br>‘ சிற்றினங்களையும், இயற்கை வாழ்விடங்களையும் பாதுகாத்தல் | ‘ கால்நடைப் பராமரிப்பு<br>‘ விலங்கினப் பரிசோதனை |

இத்தகைய விஷயங்களுக்கான H&M குழுமத்தின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை, இந்த அர்ப்பணிப்பின் விளக்கக் குறிப்புகள் பிரிவில் விளக்கிச் சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு விஷயத்தைப் பொருத்த வரையிலும், நீண்டகால நிலைக்கும் தன்மைச் செயல்திறனில் இரண்டு நிலைகள் இருக்கின்றன;

**‘** அடிப்படைநிலை சார்ந்தவை—இது சர்வதேச அளவில் ஒப்புக் கொண்டுள்ள நியமங்கள், பொருந்துகிற மற்றும் உடன்பாடுகள் அதே போல தேசிய சட்டத்திற்கு ஏற்ப இருக்கிற செயல்திறனைக் குறிக்கிறது, அதோடு தேவைகளுக்கு இடையே முரண்பாடுகள் இருக்கிற இடத்தில், பணியாளர்களுக்கு, சுற்றுசூழலுக்கு விலங்கின நலவாழ்விற்கு மிக அதிகப் பாதுகாப்பை வழங்குகிற ஒன்றே பொருந்தும். H&M குழும வியாபாரக் கூட்டாளிகள் அனைவரிடமிருந்தும் அடிப்படைத் தேவைகளுக்கு இணங்கி நடைப்பதை எதிர்பார்க்கிறோம்.

**‘ அபிலாசை சார்ந்தவை**—இது வியாபாரக் கூட்டு நிறுவனங்களின் சொந்த இயக்கங்களில் நீண்டகாலம் நிலைக்கிற தாக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான, அதே போல அவர்களது சொந்த இயக்கங்களுக்கு வெளியே உள்ள சமுதாய மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த கவலைகளைத் தீர்த்து வைப்பதில் பங்களிப்பதற்கான, அடிப்படைநிலை அளவில் சட்டப் பொறுப்பு மற்றும் சர்வதேச நியமங்களுக்கும் அப்பால் செல்கிற செய்திறனையே குறிக்கின்றது.

இத்தகைய பகுதிகளுக்குள் உள்ள செயல்திறன் என்பது, H&M குழுமத்தின் வியாபாரக் கூட்டு நிறுவனங்கள் குறித்த ஒட்டுமொத்த மதிப்பாய்வின் ஓர் உள்ளான பகுதியாகவே இருக்கின்றது. H&M குழுமம், நீண்டநாள் நிலைக்கும் தன்மையையும், தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான எங்களது அர்ப்பணிப்பையும் முன்னெடுத்துச் செல்வதற்கான எங்களது குறிக்கோளைப் பகிர்ந்து கொள்கிற வியாபாரக் கூட்டாளிகளைத் தொடர்ந்து ஈடுபடுத்தி, அவர்களோடு வளர்ந்து, அவர்களுக்குத் தொடர்ந்து வெகுமதியளிக்கும். இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பு என்பது H&M குழுமத்தோடு ஒப்பந்த வியாபார உறவு ஒன்றினைக் கொண்டுள்ள வியாபாரக் கூட்டு நிறுவனங்களின் நேரடி இயக்கங்களுக்கும், துணை ஒப்பந்ததாரர்களுக்கும் பொருந்துகிறது. H&M குழுமம், மேம்படுத்திய நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் செயல்திறனுக்காக ஒன்றுகூடி உழைப்பதற்காக, இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பில் தன்னார்வத்தோடு கையொப்பமிடுமாறு, வழங்கல் சங்கிலியில் உள்ள நேரடியாக இல்லாத வியாபாரக் கூட்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்தலாம்.

# நீண்டநாள் நிலைப்புத்தன்மை அர்ப்பணிப்பிற்கான விளக்கக் குறிப்புகள்

H&M குழும வியாபாரக் கூட்டு நிறுவனம்

## எங்களது விளக்கக் குறிப்புகளுக்கான அடித்தளங்கள்

எங்களது விளக்கக் குறிப்புகள், மனித உரிமைகள் குறித்த சர்வதேச பிரகடனம், அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் பணியில் உரிமைகள் குறித்த சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பிரகடனம், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வியாபாரம் மற்றும் மனித உரிமைகள் குறித்த வழிகாட்டும் கோட்பாடுகள் உட்பட, சர்வதேச அளவில் ஒப்புக் கொண்ட நியமங்களுக்கு இணங்கி நடப்பதை அபிவிருத்தி செய்வதற்கான எங்களது அர்ப்பணிப்பையே பிரதிபலிக்கின்றன. மனித உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் விலங்கின நலவாழ்வு விஷயங்கள் குறித்த அநேகப் பலதரப்பு உடன்படிக்கைகளையும், பலதரப்பு-அக்கறையுடையோர் நியமங்களையும், வழிநடத்தல்களையும், இவ்விளக்கக் குறிப்புகளில் உச்சந்துணையாகப் பயன்படுத்தியுள்ளோம்.

எங்களது வியாபாரக் கூட்டு நிறுவனங்களில் அநேகமானோர், தங்களது இயக்கங்களிலும், வழங்கல் சங்கிலிகளிலும் இத்தகைய நியமங்களைக் கடைபிடித்து, அபிவிருத்தி செய்ய தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள். எங்களது விளக்கக் குறிப்புகளில் உள்ள சில விஷயங்கள், எங்களது சேவை வியாபாரக் கூட்டு நிறுவனங்களுக்குப் பொருத்தமானவையாக இருப்பதை விட எங்களது உற்பத்தி வியாபாரக் கூட்டு நிறுவனங்களுக்கே அதிகம் பொருத்தமனவையாக இருக்கின்றன என்பதை நாங்களும் புரிந்துணர்ந்து கொள்கிறோம். இவ்விளக்கக் குறிப்புகளை ஓர் முழுமையான விதத்தில் கொடுப்பதில் உள்ள எங்களது நோக்கமே, எங்களது தேவைகள் குறித்த விஷயத்தில் அனைத்து வியாபாரக் கூட்டு நிறுவனங்களுக்கும் தெளிவையும், போதுமான அளவிற்கு விவரத்தையும் வழங்குவதே எங்களது குறிக்கோளாகும்.

## செயல்திறன் மதிப்பாய்வு

பரஸ்பர நம்பிக்கையும், வெளிப்படையான பேச்சுவார்த்தையும் தான், தங்களது நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் செயல்திறனில் தொடர்ச்சியான மேம்பாடுகளைக் காண்பிக்கிற வியாபாரக் கூட்டு நிறுவனங்களோடு தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கான H&M குழுமத்தின் நோக்கத்தின் மையமானவையாகும்.

திறம்பட்டச் செயல்திறன் மதிப்பாய்வையும், பேச்சுவார்த்தையையும் மேற்கொள்ளச் செய்வதற்காக, வியாபாரக் கூட்டு நிறுவனங்களிடமிருந்து நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் செயல்திறன் தரவினை வேண்டிக் கொள்வதற்கான உரிமையும், H&M குழுமத்திற்காக சரக்குகளை அல்லது சேவைகளை உண்டாக்கித் தருகிற இடங்களுக்கு அறிவிக்காத வகையில் சென்று பார்வையிடுவதற்குக்ம், H&M குழுமத்திற்கு உரிமையுள்ளது. வியாபாரக் கூட்டு நிறுவனங்களை, H&M குழுமம் ஓர் உறுப்பினராக இருக்கிற ஸ்தாபனங்களில் பிரதிநிதியாக இருக்கிற மதிப்பீட்டாளர்கள் நடத்துகிற மதிப்பீடுகளுக்கும் உட்படுத்தலாம். ஆகவே, மதிப்பீடு, அறிவிக்காத வகையில் வருகை மேற்கொள்வது மற்றும்/அல்லது நேரடியாக H&M குழுமத்திற்கு நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் செயல்திறன் தரவினை வெளியிடுவதிலிருந்து விலக்களித்து, H&M குழுமம் எழுத்துப்பூர்வமாக, வெளிப்படையாக உறுதி செய்திருந்தால் ஒழிய, H&M குழுமத்திற்கான உற்பத்தியும், சேவைகளும் எங்கே நடைபெறுகின்றன என்பதை H&M குழுமத்திற்குத் தெரிவித்து இருப்பதற்கு வியாபாரக்

கூட்டு நிறுவனங்கள் கடமைப்பட்டவையாகும். இந்தக் கடமையின் எதிர்நோக்கில், H&M குழுமத்திற்கான சரக்குகள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக உள்-ஒப்பந்தத்திற்கு விடுவதும், வீட்டு-வேலைக்குக் கொடுப்பதும் அடங்குகின்றன. உற்பத்தியை வெளியாட்களிடத்திலிருந்து பெறும் வசதியை உபயோகிக்ற கூட்டு நிறுவனங்கள், சரிபார்க்கும் நோக்கங்களுக்காக உரிய ஆவணங்களைப் பராமரிக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

அடிப்படையான தேவைகளுக்கு சீராக இணங்கிச் செல்வதைப் பார்த்துக் கொள்ளவும், அபிலாசை சார்ந்த செயல்திறன் அளவுகளைச் சென்றடைவதற்கான தொடர்ச்சியான மேம்பாட்டினை ஏற்படச் செய்யவும், நன்கு-செயல்படுகிற நிர்வாக அமைப்பினை அமல்படுத்த வேண்டும் என்றே நாங்கள் எங்களது வியாபாரக் கூட்டு நிறுவனங்களிடம் எதிர்பார்க்கிறோம். இவற்றில், சமுதாயம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த தாக்கங்களை இனங்கண்டு, திருத்தி, அவற்றை மேம்படுத்துவதற்கான, தெளிவான கொள்கைகள், ஓர் பொறுப்புள்ள ஸ்தாபனம், வழக்கங்கள், தகவல் தொடர்பு மற்றும் பின்னூட்டக் கருத்து தெரிவிக்கும் அமைப்பு அடங்குகின்றன.

நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் செயல்திறன் குறித்த தகவல்களைச் சமர்ப்பிக்கும் போது, வியாபாரக் கூட்டு நிறுவனங்கள், வெளிப்படையாகவும், H&M குழுமத்தை வேண்டுமென்றே தவறான வழியில் நடத்தாதவர்களாகவும் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம். வெளிப்படைத் தன்மை இல்லாத நிலையை, இந்த நீநீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பின் விதிமீறல் என்றே கருதுகிறோம். இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பிற்கு மற்றும்/அல்லது அந்தந்தப் பகுதிச் சட்டத்திற்கு ஒத்துழைக்க விருப்பமில்லாமல் இருப்பது அல்லது இதனை மீறி நடப்பது, வியாபாரம் குறைந்து போய்விடுவதற்கும், முடிவில் H&M குழுமத்தோடான வியாபார உறவை முறித்துக் கொள்வதில் போய் முடிந்து விடலாம்.

வெளிப்படைத்தன்மை தான், தொழிற்துறை எங்கிலுமான, அதோடு முறைப்படியான நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் சவால்களைப் புரிந்துணர்ந்து கொண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான, அத்தியாவசிய ஆரம்பப் புள்ளியாகவும் இருக்கிறது. கூட்டு நடவடிக்கைகளையும், சமுதாய மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்குத் தேவையாகிற முறைப்படியான மாற்றங்களையும் அபிவிருத்தி செய்வதற்காக, H&M குழுமம், வியாபாரக் கூட்டு நிறுவனங்கள், தொழிற்துறை, குடிமக்கள் சமுதாயம் மற்றும் அரசாங்கங்களோடு தொடர்ச்சியாக ஈடுபடும். இதனையே எங்களது வியாபாரக் கூட்டு நிறுவனங்களும் செய்ய வேண்டும் என்றே H&M குழுமம் ஊக்குவிக்கிறது.

# 1 ஆரோக்கியமான பணியிடங்கள்

## 1A சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 155 மற்றும் 183, ILO சிபாரிசுகள் 164 மற்றும் 191 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
பணியிடப் பாதுகாப்பு மற்றும் பணியாளர்களின் ஆரோக்கியம் & பாதுகாப்பு ஆகியவையே எல்லா நேரங்களிலும் ஓர் முன்னுரிமையாக இருந்தாக வேண்டும் அதோடு ஓர் பாதுகாப்பானதும், சுகாதாரமானதுமான பணியிடச் சூழலை வழங்க வேண்டும். குறைந்த பட்சமாக, இதன் பொருள்;

- பொருத்தமான சட்டங்களுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் இணங்கி நடப்பது.
- பாதுகாப்பற்ற கட்டிடங்கள் எதுவும் இல்லாமல் இருப்பது.
- பாதுகாப்பற்ற வகையில், இன்னல் தரும் எந்திரங்கள், சாதனம் மற்றும்/அல்லது மருந்துப் பொருட்களுக்கு ஆட்படுதல்.
- தீவிபத்துப் பாதுகாப்பினை, போதுமான சாதனம் மற்றும் வசதி நிலைமைகள், தொடர்ச்சியான தீயணைப்புப் பயிற்சி மற்றும் ஆட்களை வெளியேற்றுவதற்கான ஒத்திகைகள் மற்றும் தீவிபத்து இன்னல்களைத் தவிர்ப்பது ஆகியவற்றின் மூலமாகக் கடைபிடிக்க வேண்டும்.
- சுத்தமான குடி தண்ணீர் கிடைப்பதற்கான வசதியும், கழிப்பறை வசதிகளும் இருக்க வேண்டும். போதுமான காற்றோட்டத்தையும், வெப்பநிலையையும் வழங்க வேண்டும்.
- தங்குமிடம்/வீட்டுவசதியை வழங்கும் போது, அது பணியிடத்திலிருந்து தனியானதாக இருந்தாக வேண்டும் அதோடு அது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான மேற்சொன்ன அடிப்படைசிலை சார்ந்த அனைத்துத் தேவைகளுக்கும் உட்பட்டதாகும்.
- பணியிலிருந்து எழுகிற, பணியோடு தொடர்புடைய, அல்லது பணியின் போக்கில் உடல்நலத்திற்கு ஏற்படுகிற விபத்துக்கள் மற்றும் தீங்கினைத் தடுத்தல் அதோடு பணியாளர்கள் தொடர்ச்சியானதும், பதிவு செய்கிறதுமான சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பயிற்சியைப் பெற வேண்டும்.
- கர்ப்பமாகவுள்ள பணியாளார்களின் தேவைகளை நியாயமான அளவிற்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
பாலின உணர்வுள்ளதும், நல்லதுமான பழக்கத்தினைப் பயன்படுத்தி பணியாளர்களின், குறிப்பாக கர்ப்பமாக இருக்கிற பணியாளர்கள் உள்ளிட்டவர்களின், நீண்டகாலப் பாதுகாப்பு, நல்ல உடல்நலம் மற்றும் நல-வாழ்வினை பணியமர்த்தும் நிறுவனம் அபிவிருத்தி செய்கிறது.

## 1B பாகுபாடு காண்பித்தல், வேற்றுமை மற்றும் சமத்துவம்

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 100, 111 மற்றும் 159, ILO சிபாரிசுகள் 90, 111 மற்றும் 168 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
ஒவ்வொரு பணியாளரையும், எல்லா நேரத்திலும் மரியாதையோடும் கண்ணியத்தோடுமே நடத்துகிறோம். எந்தவொரு பணியாளரையும், அவமானமடையச் செய்யவோ அல்லது உடல் ரீதியிலான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது அல்லது அவர்களை உடல் ரீதியிலான, பால் ரீதியிலான, உளவியல் ரீதியிலான அல்லது வாய் வார்த்தை மூலமான வன்கொடுமைக்கு அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தக் கூடாது. பணிக்கு அமர்த்துவதில், பயிற்சி கிடைக்கச் செய்வதில், பதவி உயர்வில், வேலை நீக்கம் செய்வதில் அல்லது பணி ஓய்வு தருவதில், பாலினம் அல்லது பால் ரீதியிலான சார்பு, இனம், நிறம், வயது, கர்ப்பம், திருமண நிலை, மதம், அரசியல் அபிப்பிராயம், நாட்டினம், பூர்வீகம், சாதி, நோய் அல்லது ஊனத்தின் அடிப்படையில், எவ்விதப் பாகுபாட்டையும் காண்பிக்கக் கூடாது. பணியாளர்களை, பழிவாங்கப்பட்டு விடுவதற்கான ஆபத்து ஏதுமில்லாமல் புகார்களை அனுப்பி வைக்கச் செய்கிற குறைதீர்ப்பு அமைப்பு ஒன்று இருக்கிறது.

**அபிலாசை சார்ந்தவை:**
பணியமர்த்தும் நிறுவனம், வேற்றுமைக்காகவும், அனைத்தும் உள்ளடங்கியதோர் பணியிடத்திற்காகவும் தீவிரமாக உழைக்கும். பணியமர்த்தும் நிறுவனம், வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு எவ்வளவு சிறுபான்மையினர் மற்றும்/அல்லது பின் தங்கிய குழுவினரைப் பரிசீலிக்கலாம் என்பதையும், எவ்விதமாக அதற்கு எழுகிற தடைகளை ஆக்கப்பூர்வமாக எதிர்கொள்ளலாம் என்பதையும் புரிந்து கொள்வதற்காக, தான் அமைந்துள்ள சமுதாயத்தோடு மற்றும்/அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடும் தீவிரமாக ஈடுபடுகிறது.

## 1C அங்கீகரித்த வேலைவாய்ப்பு

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 122, 158 மற்றும் 175, ILO சிபாரிசு 166 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
செய்து முடிக்கிற அனைத்துப் பணியும், தேசியச் சட்டம் மற்றும் பழக்கத்தின் வாயிலாக நிலைநாட்டியுள்ள, அங்கீகரித்துள்ள வேலைவாய்ப்பு உறவின் அடிப்படையிலேயே இருந்தாக வேண்டும். ஒவ்வொரு பணியாளருக்கும், வேலைவாய்ப்பிற்கான நிபந்தனைகளை அவர்களது சொந்த மொழியில் வரையறுக்கிற எழுத்துப்பூர்வமான ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான உரிமையைத் தர வேண்டும் . தொழிலாளர் அல்லது சமுதாயப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் உள்ள, வழக்கமான வேலைவாய்ப்பு உறவிலிருந்து எழுகிற பணியாளர்களுக்கான கட்டுப்பாடுகளை, தொழிலாளரை மட்டும் ஒப்பந்தத்திற்கு அமர்த்துதல், குறித்த-கால ஒப்பந்தங்களை உபயோகிப்பதன் வாயிலாக அல்லது திறமைகளைக் கற்றுக் கொடுப்பதற்கான அல்லது தொடர்ச்சியான வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான உண்மையான எண்ணம் இல்லாத, வேலைப் பயிற்சித் திட்டங்கள் வாயிலாகத் தவிர்க்கக் கூடாது.

**அபிலாசை சார்ந்தவை:**
வேலைவாய்ப்பின் குறித்த-கால ஒப்பந்தங்களை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்த, சட்டத்திற்கு அவசியமாகிறவற்றுக்கும் அப்பாற்பட்ட நடவடிக்கைகளை பணியமர்த்தும் நிறுவனம் எடுக்கும். சமுதாயப் பாதுகாப்பு அமைப்பு செயலிழந்துள்ள நாடுகளில் - மருத்துவம் மற்றும் பணி ஓய்வுக் காப்பீடு உட்பட, பணியாளர்களுக்கான மாற்றுக் காப்பீட்டினை பணியமர்த்தும் நிறுவனம் வழங்குகிறது.

## 1D நியாயமான வாழ்க்கைச் சம்பளம், பலன்கள்

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 131 மற்றும் 183, ILO சிபாரிசு 135 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

**அடைப்படைநிலை சார்ந்தவை:**
எப்போதைக்கும் போன்ற பணி வாரம் ஒன்றில் பணியாற்றுவதற்குக் கொடுக்கிற சம்பளங்கள் மற்றும் பலன்கள், குறைந்த பட்சமான, தேசிய சட்ட ரீதியான அளவில், தொழிற்துறை அளவில், அல்லது கூட்டுப் பேர ஒப்பந்தந்த அளவில், இதில் எது அதிகமாக இருக்கிறதோ அதற்குச் சமமாக இருக்கும். எந்த நிலையிலும், ஓர் நியாயமான வாழ்க்கைச் சம்பளமானது எப்போதுமே பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைச் சந்திப்பதற்குப் போதுமானதாக இருக்க வேண்டும் அதோடு கொஞ்சம் வெகுமதி ஊதியத்தையும் வழங்க வேண்டும். அனைத்து சம்பளங்களையும், ஓர் தொடர்ச்சியான அடிப்படையில், முழுமையாகக் கொடுத்துவிட வேண்டும், அதோடு சம்பளக் காலத்திற்கான சம்பளம் குறித்த விவரங்களை, எழுத்துப்பூர்வமானதும், புரிந்து கொள்ளக்கூடியதுமான வடிவில் வழங்கியாக வேண்டும். சட்டப்படி அல்லது ஒப்பந்தப்படி அவசியமாகிற அனைத்து உபரி பலன்களையும் வழங்கிவிட வேண்டும். ஓர் ஒழுங்கு நடவடிக்கையாக, சம்பளங்களிலிருந்து பிடித்தம் செய்வதை அனுமதிக்கக்கூடாது. பணியாளர்கள் சட்டப்பூர்வமாக உரிமை பெறுகிற எவ்வித சம்பள விடுப்பையும் அவர்களுக்கு வழங்கி, அதற்கு சரியான விதத்தில் ஈடு செய்ய வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
பணியமர்த்தும் நிறுவனம், பணியாளர் திறமைகளையும், அனுபவத்தையும் பிரதிபலிக்கிறதோர் சம்பள அமைப்பையே ஏற்றுக் கொள்ளும். பணியமர்த்தும் நிறுவனம், கொடுக்கிற சம்பளம் பணியாளர்களின் அடிப்படைத் தேவைகளைச் சந்திக்கிறதா என்பதைப் புரிந்து கொள்வதற்காக, பணியாளர் கருத்துக்கணிப்புகளைத் தொடர்ச்சியாக நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ளும். கூடுதல் தேவைகளைப் புரிந்து கொள்வதற்காக ஓர் விரிவான, முழுமையான, பணியாளர் தேவைகள் மதிப்பீட்டைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

## 1E வேலை நேரங்கள்

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 001, 014, 106 மற்றும் 030 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

**அடைப்படைநிலை சார்ந்தவை:**
ஒரு வாரத்தில் உள்ள வேலை நேரங்களும், அதே போல கூடுதல் வேலை நேரங்களும், தேசிய சட்டம், உடன்படிக்கைகள் அல்லது கூட்டான ஒப்பந்தம், இதில் எது பெரியளவிலான பாதுகாப்பைப் பணியாளர்களுக்கு வழங்குகிறதோ அதற்கு இணங்கியே இருக்க வேண்டும் அதோடு அதனை ஒப்பந்தங்களில் வரையறுக்க வேண்டும். எந்த நிகழ்விலும், பணியாளர்களைத் தொடர்ச்சியான அடிப்படையில் வாரத்திற்கு 48 மணி நேரங்களுக்குக் கூடுதலாக வேலை செய்ய வைக்கக் கூடாது அதோடு ஒவ்வொரு 7 நாள் காலத்திற்கும் குறைந்தது ஒரு நாள் ஓய்வு வழங்கிவிட வேண்டும். 7 நாள் காலகட்டத்தில் இருக்கிற மொத்த வேலை நேரங்கள் 60 மணி நேரங்களுக்கு மேல் இருக்கக் கூடாது. கூடுதல் நேரம் பணியாற்றுவது தன்னார்வத்திலானதாக இருக்க வேண்டும், அது வாரத்திற்கு 12 மணி நேரங்களுக்கு மிகக் கூடாது அதோடு அதற்கு எப்போதுமே உயர் மதிப்பில் நிதியீடு செய்துவிட வேண்டும், இது வழக்கமான சம்பள விகிதத்தில் 125% அளவைவிடக் குறைவானதாக இருக்கக் கூடாது என்றே சிபாரிசி செய்கிறோம்.

**அபிலாசை சார்ந்தவை:**
பணியமர்த்தும் நிறுவனம், கூடுதல் நேரம் பணியாற்றுவதைத் தவிர்ப்பதற்காக, உற்பத்தித் திட்டத்தை, கொள்ளளவை மற்றும் வெளியேற்றத்தை அளவிட்டுக் கண்காணிப்பதற்கான அதிநவீன அமைப்பு ஒன்று பணியிடத்தில் இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## 1F சங்கம் அமைப்பதற்கும் கூட்டாக பேரம் பேசுவதற்குமான சுதந்திரம்

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 87, 98, 135 மற்றும் 154, ILO சிபாரிசுகள் 135 மற்றும் 143 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

**அடைப்படைநிலை சார்ந்தவை:**
விதிவிலக்கு அல்லது தனிச்சலுகை ஏதுமில்லாமல், அனைத்துப் பணியாளர்களுக்கும், தங்களது சொந்த விருப்பத்திற்கு ஏற்ப தொழிலாளர் யூனியன் ஒன்றில் சேர்ந்து கொள்வதற்கான அல்லது அமைத்துக் கொள்வதற்கும், கூட்டாகச் சேர்ந்து பேரம் பேசுவதற்குமான உரிமை இருக்கிறது. பணியாளர்களின் பிரதிநிதிகளுக்கு எதிராக பாகுபாடு காண்பிக்க மாட்டார்கள் அதோடு அவர்களுக்கு பணியிடத்தில் தங்களது பிரதிநிதியாகச் செயல்படும் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதி இருக்கும். சங்கம் அமைத்துக் கொள்வதற்கும், கூட்டாகப் பேரம் பேசுவதற்குமான சுதந்திரத்திற்கான உரிமையை தேசிய சட்டம் கட்டுப்படுத்துகிற இடத்தில், பணியமர்த்தும் நிறுவனம், சுதந்திரமானதும், தடையில்லாததுமான சங்கம் மற்றும் பேரம் பேசுவதற்கு, அதற்கு இணையானதோர் வசதியை உருவாக்கிக் கொள்வதை ஊக்குவித்து, அதற்கு இடைஞ்சல் உண்டாக்காமல் இருக்க வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
பணியமர்த்தும் நிறுவனம், சாதாரண முறையிலான பேச்சுவார்த்தைக்கு வசதி செய்து தரவும், மேம்படுத்தவும் தொடர்ச்சியான அடிப்படையில் பணியாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுகிறது. பணியாளர்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆக்கப்பூர்வமாகத் தீர்ப்பதற்காக, பணியமர்த்தும் நிறுவனம், தான் அமைந்துள்ள பகுதியைச் சேர்ந்த மற்றும் பிராந்திய தொழிலாளர் சங்கங்களோடு நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அதோடு பணியாளர்களின் சங்கத்தின் ஓர் உறுப்பினராகவும் இருக்க வேண்டும்.

## 1G குழந்தைத் தொழிலாளர் மற்றும் இளம் வயதுப் பணியாளர்கள்

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 138 மற்றும் 182, ILO சிபாரிசுகள் 146 மற்றும் 190 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

குழந்தை உரிமைகள், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் வியாபாரக் கொள்கைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
குழந்தைத் தொழிலாளரை ஏற்றுக் கொள்வதில்லை. 15 (அல்லது ILO உடன்படிக்கை 138 விதிவிலக்குக் ஒன்றைத் தருகிற இடத்தில் 14) வயதை விடக் குறைந்த வயதுடைய அல்லது பணியமர்த்துவதற்கான சட்டப்பூர்வ வயது 15 வயதைவிட அதிகமானதாக இருந்தால் அதனைவிடக் குறைந்த வயதுடைய எவரையும் பணியமர்த்தக் கூடாது. 18 வயதைவிடக் குறைவான வயதுடைய நபர்களைப் பணியமர்த்துவது சம்பந்தமான அனைத்து சட்டப்பூர்வமான வரம்புகளையும் பின்பற்றுவோம். அவர்களை, இன்னல்தரும் வேலை, இரவுநேரப் பணி மற்றும் அவர்களது வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தக்கூடிய எவ்வித வேலையிலிருந்தும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

பணியமர்த்துவதற்கான சட்டப்பூர்வ வயதிற்குக் கீழே எவரையும் பணியமர்த்துவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பணியமர்த்தும் நிறுவனம், தரமான கல்வியைப் பெற்றுக் கொள்ளப் பாடசாலைக்குச் செல்வதற்காக, தொடர்ந்து அக்கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காகவே பணியிடம் ஒன்றில் பணியாற்றுவதாகக் காண்கிற குழந்தை எதற்கும், அக்குழந்தை பெரியவராகும் வரை, கல்வி கற்பதிலிருந்து பணியாற்றும் நிலைக்கு மாறுவதற்கான ஏற்பாடுகளை வழங்குகிற கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தோற்றுவித்து, அவற்றில் பங்கேற்று, அவற்றுக்குப் பங்களிக்க வேண்டும். குழந்தையின் வயது மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஏற்றதோர் வித்ததில், அக்குழந்தையின் பெற்றோர்களோடு மற்றும்/அல்லது பாதுகாவலரோடும், அக்குழந்தையோடும் ஆலோசனை செய்து நலனையே எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
பணியமர்த்தும் நிறுவனம், குழந்தைத் தொழிலாளர் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காகக் கல்வியையும், நீண்டநாள் நிலைக்கத்தக்கத் தீர்வுகளையும் மேம்படுத்துவதற்காக, தான் அமைந்துள்ள பகுதிச் சமுதாயங்களோடும், அக்கறையுள்ளோர்களோடும், தீவிரமாக ஈடுபட வேண்டும்.

## 1H கட்டாய, அடிமை, சிறை மற்றும் சட்டவிரோதத் தொழிலாளர்

எங்களது அணுகுமுறையானது, ILO உடன்படிக்கைகள் 29 மற்றும் 105, ILO சிபாரிசு 35 ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்

**அடைப்படைநிலை சார்ந்தவை:**
கட்டாய, அடிமை, சிறை மற்றும் சட்டவிரோதத் தொழிலாளர் நிலையை ஏற்றுக்கொள்வதில்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியமர்த்துகிற பட்சத்தில், பணியமர்த்துக் கட்டணம் உட்பட, ஒப்பந்தத்தின் மற்றும்/அல்லது அயல்நாட்டுப் பணியாளர்களின், வேலைவாய்ப்புத் தகுதித் தொகையைக் கொடுப்பதற்குப் பணியமர்த்தும் நிறுவனமே பொறுப்பானதாகும். பணியாளர்கள் “வைப்புநிதிகளை” அல்லது அடையாள ஆவணங்களை தங்களுடைய பணியமர்த்தும் நிறுவனத்திடம் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது அதோடு நியாயமான அறிவிப்பைக் கொடுத்த பிறகு அவர்களது வேலைவாய்ப்பிலிருந்து விலகிச் செல்வதற்கு சுந்திரமானவர்களாக இருப்பார்கள். பணியாளரின் சுதந்திரமான செயல்பாட்டைக் கட்டுப்படுத்தக் கூடாது. சம்பளத்தின் எந்தவொரு பகுதியையும் பிடித்து வைக்கக்கூடாது.

**அபிலாசை சார்ந்தவை:**
அங்கீகரித்துள்ள வேலைவாய்ப்பு என்பதைப் பாருங்கள்.

# 2 ஆரோக்கியனான சூழல் மண்டலங்கள்

## 2A பருவநிலை மற்றும் காற்றுத் தரத்தில் ஏற்படுகிற தாக்கம்

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, செல்லுபடியாகிற அனுமதிகளைப் பராமரிப்பது உட்பட, காற்றுத் தரம், காற்று உமிழ்வுகள் மற்றும் ஆற்றல் சிக்கனம் குறித்த, அனைத்து இயக்கங்களையும், பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கவே நடத்த வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, பின்வருவனவற்றின் மூலம் சீதோஷன நிலை மாற்றம் மற்றும் காற்றுத் தரத்தின் மீது தான் ஏற்படுத்துகிற தாக்கங்களைத் தீவிரமாகக் குறைக்கிறது:

- ஆற்றல் மேலாண்மை மற்றும் திறத்தன்மையில் தொடர்ச்சியான மேம்பாடு.
- பசுமைக்குடில் வாயுக்கள் (GHG) மற்றும் சுற்றுச்சூழலுக்கு இன்னலைக் காண்பிக்கிற மற்ற காற்று உமிழ்வுகளை குறைப்பது அல்லது அகற்றுவது மற்றும் GHG வரைவு திட்டத்திற்கு ஏற்ப இலக்குகளை அமைப்பது[1].
- ஆற்றல் ஆதார வளங்களைப் பொறுப்புடன் தெரிவு செய்து, குறைந்த-கரி-அடர்த்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதார வளங்களை ஏற்றுக் கொள்வது நோக்கிய திசையில் வளர்ச்சியுள்ள அணுகுமுறையை எடுப்பது.

## 2B நீர் வளங்களில் ஏற்படுகிற தாக்கம்

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, செல்லுபடியாகிற அனுமதிகளைப் பராமரிப்பது உட்பட, தண்ணீர் பாதுகாப்பு மற்றும் தண்ணீர் தரம் குறித்த, அனைத்து இயக்கங்களையும், பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கவே நடத்துகிறது. உள்ளான ஈரப் பதப்படுத்தலுள்ள தொழிற்சாலைகள், ஃப்ளோ மீட்டர்கள் மூலமாக தண்ணீர் எடுப்பதையும், கழிவுநீர் வெளியேற்றத்தையும் அளவிடும், அதோடு கழிவு நீரை முழுமையாக உள்ளேயே சுத்திகரிக்கும் வசதியுள்ள[2] தொழிற்சாலைகள் சட்டத் தேவைகள் அல்லது தண்ணீர் நியமம்[3], இதில் எது கடுமையானதோ அதற்கு இணங்கி நடக்க வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, தொழிற்சாலையின் தண்ணீர் எடுக்கும் அளவுகளைத் தொடர்ச்சியாகக் குறைப்பதைக் காண்பிப்பதன் மூலமாக, தண்ணீர் உபயோகத்தைக் குறைக்கத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கிறது. வீட்டு உபயோக நோக்கங்களுக்காக மட்டுமே (குழாய்கள், கழிவறைகள், குளிர்விக்க) தண்ணீரை உபயோகிக்கிற தொழிற்சாலைகளைப் பொருத்த வரையில், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகிற சாதனத்தைப் பொருத்துவதைப் பார்த்துக் கொள்வதே போதுமானதாகும். மழை நீர் சேகரிப்பு போன்ற தண்ணீரை சேமிக்கும் யுக்திகளை, கூடுமான இடங்களில் பொருத்த வேண்டும்.

உள்ளான ஈரப் பதப்படுத்தல் உள்ள தொழிற்சாலைகளைப் பொருத்த வரையில்;

- உள்ளான தண்ணீர் உபயோகத்தை அளவிடுவதன் உரிய அளவினை அமல்படுத்த வேண்டும்.
- நீராதார வளங்கள் மீது ஏற்படுகிற தாக்கத்தைக் குறைப்பதற்காக, தொழிற்சாலையின் நீர்ச் சமநிலையை[4] மதிப்பிட்டு, தொடர்ச்சியான மேம்பாட்டினைக் காண்பிப்பதற்காக உரிய குறைப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- நீண்ட கால அளவில், ஓர் பொறுப்புள்ள நீர்க் கண்காணிப்பாளராகச் செயல்படுங்கள். இதன் பொருள், சொந்த செயல்பாடுகளில் இருந்து ஏற்படுகிற தண்ணீர் தாக்கங்களைக் குறைப்பதற்குக் கூடுதலாக, வியாபாரக் கூட்டு நிறுவனமானது, கிடைக்கிற நீராதார வளங்களை, நீண்ட கால சமுதாய, சுற்றுச்சூழல் சார்ந்த மற்றும் பொருளாதாரத் தேவைகளைச் சந்திப்பதற்காகப் பராமரிக்கிறோம் என்பதைப் பார்த்துக் கொள்வதற்காக, தான் அமைந்துள்ள பகுதியில் உள்ள அக்கறை காண்பிப்பவர்களோடு கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுகிறது. தண்ணீர் கண்காணிப்பாளர் பொறுப்பு என்பதும், வியாபாரத்தைப் பொருத்த வரையில் அதன் அர்த்தம் என்ன என்பதையும், இண்டெர்நேஷனல் வாட்டர் ஸ்டீவர்டுஷிப் ஸ்டேண்டர்டு வரையறுக்கிறது[5].

## 2C வேதிப்பொருட்களின் உபயோகம்

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, செல்லுபடியாகிற அனுமதிகளைப் பராமரிப்பது உட்பட, வேதிப்பொருள் உபயோகம் மற்றும் அப்புறப்படுத்துதல் குறித்த, அனைத்து இயக்கங்களையும், பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கவே நடத்துகிறது. H&M குழுமத்திற்கு பொருள் எதையும் உற்பத்தி செய்கிற வியாபாரக் கூட்டு நிறுவனங்கள், ஒப்பந்த ரீதியாக ஒப்புக் கொண்ட பொருந்துகிற H&M குழுமத்தின் கட்டுப்படுத்திய மருந்துப்பொருட்கள் பட்டியல் (RSL) மற்றும் கட்டுப்படுத்திய மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல் பட்டியலில் (MRSL) குறிப்பிட்டுள்ள தேவைகள் அனைத்தையும் சந்தித்தாக வேண்டும். உபயோகிக்கிற அனைத்து வேதிப்பொருட்களையும் இருப்பு வைத்தல், கையாளுதல், உபயோகித்தல் மற்றும் அப்புறப்படுத்தல் ஆகியவை, ஒவ்வொரு வேதிப் பொருளின் பாதுகாப்புத் தரவுத் தாளுக்கு (SDS) இணங்கியாக வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
தொழில்நிறுவனம் உபயோகிக்கிற வேதிப்பொருட்கள் அனைத்தும், இன்னல் தரும் மருந்துப் பொருட்கள் இல்லாதவையாகும்[6]. தொழில்நிறுவனமானது, தனது வேதிப்பொருள் உபயோகத்தை ஆக்கப்பூர்வமாக மதிப்பீடு செய்து, மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்படுகிற ஆபத்துக்களைக் குறைக்கிற, அல்லது "பசுமை வேதியியலை" ஏற்றுக் கொள்வதன் வாயிலாக ஆதார வளத் திறத்தன்மையை அதிகரிக்கச் செய்கிற, கிடைக்கிற சிறந்த வேறு வேதிப்பொருட்கள் மற்றும் மாற்று நடைமுறைகளை பதிலாக உபயோகிக்கிறது[7].முன்னெச்செரிக்கை நடவடிக்கைக் கோட்பாட்டினைப் பயன்படுத்த வேண்டும்.

1. GHG Protocol Corporate Accounting and Reporting Standard (http://ghgprotocol.org/)
2 Full internal treatment means that the wastewater is only treated by the facility's own internal Effluent Treatment Plant before being discharged to a natural water body
3 Industry standard for wastewater quality developed by a working group of several companies, coordinated by Business for Social Responsibility (BSR).
4 The AWS International Water Stewardship Standard, p.86
5 allianceforwaterstewardship.org
6 Hazardous substances means all those that show intrinsically hazardous properties (persistent, bio-accumulative and toxic (PBT); very persistent and very bioaccumulative (vPvB); carcinogenic, mutagenic and toxic for reproduction (CMR); endocrine disruptors (ED); or equivalent concern), not just those that have been regulated or restricted in other regions
7 Green chemistry refers to the design of chemical products and processes that reduce or eliminate the generation of hazardous substances, reduce waste and conserve energy and water.

## 2D கழிவு, மறு-உபயோகம் மற்றும் மறுசுழற்சி

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, செல்லுபடியாகிற அனுமதிகளைப் பராமரிப்பது உட்பட, அனைத்து இயக்கங்களையும், பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கவே நடத்துகிறது. சேவைகள் கிடைக்கிற இடத்தில், அனைத்து இன்னல் தரும் கழிவையும், அங்கீகாரம் பெற்ற அல்லது உரிமம் பெற்ற இன்னல் தரும் கழிவைப் பெறுபவரே கையாள வேண்டும்.

**அபிலாசை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, மூலப்பொருள் உபயோகத்தை உகந்ததாக ஆக்குவதில் தொடர்ச்சியான மேம்பாட்டைக் காண்பிப்பதன் மூலமாகவும், அதிகமதிகமான மறுசுழற்சி செய்தல் மூலமாகவும், மூலப் பொருட்களை மறு உபயோகம் செய்வதன் மூலமாகவும், தனது இதற்கு முன் உபயோகித்திராத மூலப் பொருட்களின் உபயோகத்தையும், சுற்றுச்சூழலில் அது ஏற்படுகிற தாக்கத்தையும் ஆக்கப்பூர்வமாகக் குறைக்கிறது. தொழில்நிறுவனமானது, குப்பை மேட்டிற்குச் செல்கிற கழிவுகளைக் குறைப்பதில் முன்னேற்றத்தைக் காண்பிக்கிறது அதோடு வட்டப் பொருளாதாரப் புதுமைக்கு ஏற்ற வகையிலான தீர்வுகளைத் தீவிரமாக வழங்குகிறது.[8]

## 2E சிற்றினங்களையும், இயற்கை வாழ்விடங்களையும் பாதுகாத்தல்

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, செல்லுபடியாகிற அனுமதிகளைப் பராமரிப்பது உட்பட, அனைத்து இயக்கங்களையும், பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கவே நடத்துகிறது. மூலப் பொருட்கள் என்பதில், **அழியும் நிலையில் உள்ள சிற்றினங்களில் செய்யும் சர்வதேச வர்த்தகம் குறித்த உடன்படிக்கையில்** (CITES)[9] பட்டியலிட்டுள்ள அல்லது IUCN சிவப்புப் பட்டியலில்[10] மிகமிகக் கடுமையாக அழியும் நிலையில் உள்ளவை, அழியும் நிலையில் உள்ளவை, அழியும் வாய்ப்பில் உள்ளவை என்பதாக பட்டியலிட்டுள்ள சிற்றினங்கள் அடங்கக்கூடாது.

**அபிலாசை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, அதிகமாக நீண்டநாள் நிலைக்கும் தன்மையுள்ள பண்ணையம் மற்றும் காடுவளர்த்தல் பழக்கங்களை உறுதி செய்வதற்காக, மூன்றாம்-தரப்பினர் சரிபார்த்த மூலப் பொருட்களையே வருவிக்கிறது.

# 3 விலங்கின நலவாழ்வு

## 3 A கால்நடைப் பராமரிப்பு

**அடைப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, செல்லுபடியாகிற அனுமதிகளைப் பராமரிப்பது உட்பட, அனைத்து இயக்கங்களையும், பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கவே நடத்துகிறது. H&M குழுமத் தயாரிப்புகளுக்கான விலங்கின மூலம் கொண்ட பொருட்களை வருவிப்பதற்கான மேற்கொண்ட தேவைகளை, *H&M*குழும விலங்கின நலவாழ்வு மற்றும் பொருள் நன்னெறிகள் கொள்கையில் குறிப்பிட்டுள்ளோம். குழுமத் தயாரிப்புகளுக்கு உபயோகிக்கிற கம்பளி, ரோமம் மற்றும் கம்பளி உரோமங்களை உற்பத்தி செய்கிற பண்ணைகள் அனைத்தும், *H&M* குழுமத்தின் நல்ல கால்நடைப் பராமரிப்பிற்கான தேவைகளைச் சந்தித்தாக வேண்டும், இவை ஃபைவ் ஃப்ரீடம்ஸ் ஃப்ரேம்வொர்க் என்பதன் அடிப்படையிலானவையாகும்.[11]

**அபிலாசை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, வருவித்த தயாரிப்புகள் மற்றும் சேவைகள் அனைத்திற்குமான தனது சொந்த வழங்கல் சங்கிலியில், நல்ல கால்நடைப் பராமரிப்பினைத் தீவிரமாக அபிவிருத்தி செய்கிறது . நடவடிக்கைகளில், மனிதத் தன்மையோடு கூடிய சான்றளிப்புத் திட்டம் ஒன்றின் வாயிலாக மூன்றாம் தரப்பு சரிபார்த்த மூலப் பொருட்களை வருவிப்பதற்கு ஆக்கப்பூர்வமாக நாடுவது அடங்குகிறது.[12]

## 3 B விலங்கினப் பரிசோதனை

**அடிப்படைநிலை சார்ந்தவை:**
தொழில்நிறுவனமானது, பொருந்துகிற அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முழுமையாக இணங்கி நடக்கிறது. H&M குழுமத் தயாரிப்புகள் எதிலும், விலங்கினப் பரிசோதனையைப் பயன்படுத்தக் கூடாது. H&M குழுமம், அழகுசாதன உட்பொருட்கள் மேம்பாடு அல்லது அழகுசாதன உட்பொருள் பாதுகாப்பு மதிப்பீட்டிற்கு தொடர்புடையதாக, 11 மார்ச் 2009 ஆம் தேதிக்குப் பிறகு விலங்கினங்களில் பரிசோதனை செய்து இருக்கிற அழகுசாதன உட்பொருட்களின் உபயோகத்தை அனுமதிப்பதில்லை. அதுபோன்ற விலங்கினப் பரிசோதனையை, அழகுசாதனத் தயாரிப்பு சப்ளை செய்பவர்கள் அல்லது அவர்களது மூலப்பொருள் சப்ளை செய்பவர்கள், உற்பத்தியாளர்கள் அல்லது முகவர்கள் செய்யக் கூடாது.

**அபிலாசை சார்ந்தவை:**
அழகுசாதனத் தயாரிப்பாளர்களைப் பொருத்த வரையில்;

‘ H&M குழுமத்திற்குக் கூடுதலாக, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தயாரிப்புகள் குறித்த H&M குழுமத் தேவைகளைப் பொருத்துங்கள்.
‘ தொடர்ச்சியாக, நுகர்வோர் பாதுகாப்பு மதிப்பீட்டினை உறுதி செய்வதற்கு, மாற்று, விலங்கினப் பரிசோதனை அல்லாத முறைகளை உபயோகியுங்கள்.

**2** ellenmacarthurfoundation.org
**3** cites.org
**4** iucnredlist.org
**5** Recommendations on animal welfare set out by the World Organisation by Animal Health (OIE) in their Animal Health Codes and the Farm Animal Welfare Committee (FAWC).
**6** Such as, but not limited to, Freedom Foods (freedomfood.co.uk), Humane Certified programs (certifiedhumane.org) and Textile Exchange’s Responsible Down Standard and Responsible Wool Standard (responsibledown.org, responsiblewool.org)

# நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பு

## H&M வியாபாரக் கூட்டு நிறுவனம்

As a Business Partner to H&M, we commit to complying with the **Fundamental** requirements on the issues outlined in this Sustainability Commitment, and to implement them in our operations as well as aim to realize them throughout our supply chain. H&M represents all affiliated companies and brands within the H&M Group.

குழுமத்திற்கானதோர் வியாபாரக் கூட்டு நிறுவனமாக, இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பில் கோடிட்டுக் காட்டியுள்ள விஷங்கள் குறித்த அடிப்படை நிலை சார்ந்த தேவைகளுக்கு இணங்கி நடக்கவும், அவற்றை எங்களது இயக்கங்களில் அமல்படுத்தவும், அதே போல எங்களது வழங்கல் சங்கிலி எங்கிலும் அவற்றை உணரவும் நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம். H&M என்பது, H&M குழுமத்திற்குள் உள்ள அனைத்துக் கூட்டு நிறுவனங்களையும், பிராண்டுகளையும் குறிக்கிறது.

Furthermore, we understand that H&M has the ambition to engage and continue to grow with Business Partners that share H&M's sustainability ambition beyond mere compliance with the law to advance social and environmental sustainability, stated as **Aspirational** performance criteria in this Sustainability Commitment.

மேற்கொண்டும், H&M குழுமத்திற்கு, இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மைக்கான அர்ப்பணிப்பில் அபிலாசை சார்ந்த செயல்திறன் என்பதாகச் சொல்லியுள்ள, H&M குழுமத்தின் நீண்டநாள் நிலைக்கும் தன்மைக் குறிக்கோளை, சமுதாய மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நீண்ட நாள் நிலைக்கும் தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்காக சட்டத்திற்கு வெறுமனே இணங்கிச் செல்வதற்கு அப்பாலும் சென்று பகிர்ந்து கொள்கிற வியாபாரக் கூட்டு நிறுவனங்களோடு ஈடுபட்டு, தொடர்ந்து வளர்வதற்கான குறிக்கோள் இருக்கிறது என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

Therefore, as a Business Partner to H&M, we agree to be monitored and evaluated on our sustainability performance within the areas described in this Sustainability Commitment.

ஆகவே, H&M குழுமத்திற்கானதோர் வியாபாரக் கூட்டு நிறுவனமாக, இந்த நீண்டநாள் நிலைக்கும் தன்மை அர்ப்பணிப்பில் விவரித்துள்ள பகுதிகளுக்குள், எங்களது நீண்டநாள் நிலைக்கும் தன்மைச் செயல்திறன் குறித்து எங்களைக் கண்காணிப்பதற்கும், மதிப்பாய்வு செய்வதற்கும் நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

We recognize that this Sustainability Commitment is drafted and valid in the English language. Where there are different language versions of this document these shall be considered translations of convenience only and the English version will prevail in any case of discrepancy.

இந்த நீண்டநாள் நிலைப்புத்தன்மை அர்ப்பணிப்பை ஆங்கிலத்தில் வரைவு செய்து, செல்லுபடியாகிறது என்பதை நாங்கள் புரிந்துணர்ந்து கொள்கிறோம். இந்த ஆவணத்தின் வெவ்வேறு மொழிப் பதிப்புகள் இருக்கும் இடத்தில், அவற்றை வசதிக்கேற்ப மொழிபெயர்த்தவையாகவே கருதுவோம் அதோடு முரண்பாடு இருக்கும் எந்த நிலையிலும் ஆங்கிலப் பதிப்பே மேலோங்கியதாக இருக்கும்.

**Place and date / இடம் மற்றும் தேதி**

**Company name / நிறுவனப் பெயர்**

**Signature / கையொப்பம்**

**Company stamp / நிறுவன முத்திரை:**

**Name in printed letters and title /பெயர் கொட்டை எழுத்துக்களில் மற்றும் பதவி /**